# விருது வாங்கிக் கொடுத்த விதைகள்!

10.07.2013






**பிரமிக்க வைக்கும் பெண்கள்!**

நெல், உளுந்து, கரும்பு, வெண்டை, கத்திரி எனப் பல வகையான பயிர்களிலும் வீரிய ஒட்டு விதைகளை உருவாக்க முடிந்த விஞ்ஞானிகளால் கூட சிறுதானியங்களில் பெரிய அளவில் ஒட்டு விதைகளை உருவாக்க முடியவில்லை. அந்தளவுக்கு வீரியமானவை, சிறுதானிய விதைகள். அப்படிப்பட்ட பல வகையான சிறுதானியங்களை வாழையடி வாழையாகப் பயிரிட்டு பாதுகாத்து வருகிறார்கள், மலைவாழ் மக்கள். அவர்களில், திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாது மலையில் உள்ள புதுப்பட்டுக் கிராமத்தைச் சோந்த 'தீப ஒளி மகளிர் சுய உதவிக் குழுவினர் குறிப்பிடத்தக்கவர்கள். பாரம்பரிய சாமை ரகங்களைத் தொடர்ச்சியாக சாகுபடி செய்து, பாதுகாத்து வருவதற்காக… மத்திய அரசின் 'பாரம்பரிய விதை பாதுகாப்பு விருது' மற்றும் 10 லட்சம் ரூபாய் ரொக்கப் பரிசை சமீபத்தில் வென்றுள்ளனர் இந்தக் குழுவினர் ஜவ்வாது மலையில் இருக்கும் எல்லாருமே காலங்காலமாக மழையை நம்பி மானாவாரியாக, சாமை, பனி வரகு, பேய் எள், கேழ்வரகு என்று பயிர் செய்கிறோம். இதுதான் எங்கள் சாப்பாடு. தானியம் விதைக்கும்போதே மொச்சைப்பயிர் போட்டு பருப்புக்கு எடுத்துக்குவோம். ஆனால், இப்போது இங்கேயும் கொஞ்சம் வசதியானவர்கள் சிறுதானியங்களைக் குறைத்துக் கொண்டு, கிணறு தோண்டி நெல், மக்காச்சோளம், பருத்தி என்று சாகுபடி செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். கொஞ்சமாக நிலம் வைத்திருக்கும் எங்களை மாதிரியான ஆட்கள்தான் வழக்கம்போல் சிறுதானியங்களை விதைப்பது, தேன் எடுப்பதற்கு, புளிய மரம், பலா மரங்களிலிருந்து பழங்களை சேகரித்து விற்பனை செய்வது என்ற பாரம்பரியமான வேலைகளைத் தொடர்ந்து கொண்டிருக்கிறோம் என்றார். மூன்று வருடத்திற்கு முன்பு "புது வாழ்வுத் திட்டம்' மூலமாக 12 உறுப்பினர்களுடன் தீப ஒளி மகளிர் சுய உதவிக்குழுவை ஆரம்பித்தோம். இந்தக் குழு மூலமாக மாதம் 50 ரூபாய் சேமிக்கிறோம். பல திட்டங்கள் மூலமாக குழுவுக்கு கிடைக்கும் சுழல் நிதியை, குழுவில் இருப்பவர்களுக்கு ஒரு பைசா வட்டிக்கு கொடுத்து, பணப்பிரச்னை இல்லாமப் பார்த்துகிறோம். அதோட, சிறுதானிய வகைகளை விவசாயிகளை பயிர் செய்யச்

சொல்லி நாங்களே வாங்கி விற்பனை செய்கிறோம் என்றார். குழு உறுப்பினர் பத்மாவதி, குழு மூலமாகவும் பாரம்பரிய தானியங்களைப் பயிர் செய்கிறோம். எங்கள் குழுவிலிருக்கும் ஒவ்வொருத்தருக்கும் அரை ஏக்கரிலிருந்து 5 ஏக்கர் வரைக்கும் நிலமிருக்கு. அந்த நிலங்களில் பாரம்பரிய தானியத்தை சாகுபடி செய்கிறோம். முன்னோர் காலத்திலிருந்து சாகுபடி செய்து கொண்டிருந்த சிட்டஞ் சாமை, வெள்ளச்சாமை, வெள்ள சிட்டஞ் சாமை, பெருஞ்சாமை, கருஞ்சாமை என்று மொத்தம் ஐந்து ரக சாமைகளோடு, வேளாண் பல்கலைக் கழகம் புதிதாக கொடுத்த கோ -3, கோ – 4 ரக சாமைகளையும் விதைக்கிறோம். எல்லா ரகங்களுமே ஏக்கருக்கு 600 கிலோவிலிருந்து, 800 கிலோ வரைக்கும் மகசூல் கொடுக்கும். இதில் பெருஞ்சாமை மட்டும் விளைவதற்கு ஆறு மாதமாகும். மற்ற சாமை ரகங்கள் மூன்று மாதத்தில் விளைந்திவிடும். சாமை, பனி வரகு, வெள்ளை வரகு, வரகு மாதிரியான தானியங்களை ஆனி, ஆடியில் விதைப்போம். அது புரட்டாசி, ஐப்பசி மாதத்தில் அறுவடையாகும். அதற்குப் பிறகு உடனே நிலத்தை உழுது… அந்த மாதம் கிடைக்கும் மழையில் பேய் எள்ளு, கொள்ளு என்று விதைத்த விடுவோம்.

நாங்க விதைகளை வெளியில் வாங்குவதில்லை. எங்களுக்குள்ளேயே கொடுத்து மாற்றிக் கொள்வோம். பல்கலைகழகத்திலிருந்து ஒரு வருடத்திற்கு முன் எங்கள் பகுதிக்கு வந்திருந்தவர்கள்தான் (பல்கலைக்கழக சிறுதானியத் துறையினர்) நாங்கள் பாரம்பரிய விதைகளை சாகுபடி செய்வதைப் பார்த்துவிட்டு, மத்திய அரசு விருதுக்குப் பரிந்துரை செய்தார்கள். அதற்குப் பிறகுதான், எங்கள் குழுவுக்கு பாரம்பரிய விதை பாதுகாப்பிற்கான விருதும், 10 லட்ச ரூபாய் ரொக்கமும் கிடைத்தது. டெல்லியில் வைத்து, மத்திய வேளாண் மற்றும் உணவுப் பதப்படுத்துதல் துறை இணையமைச்சர் தாரிக் அன்வர் இதையெல்லாம் எங்களுக்குக் கொடுத்தார் என்றார் பத்மாவதி.
விளையும் சாமையில் வீட்டுத் தேவைக்கு போக மற்றதை விற்றுவிடுவோம். ஒரு கிலோ 25 ரூபாயிலிருந்து 30 ரூபாய் வரைக்கும் விலை போகும். விருது மூலம் கிடைத்த பணத்தில் 3 லட்சம் ரூபாய்க்கு சாமையை அரிசியாக்கும் மெஷினை வாங்கி, மதிப்புக் கூட்டி விற்கப்போகிறோம். சாமை மூலமாக நல்ல வருமானம் கிடைத்தால்… எங்களுடைய பாரம்பரியமான விதைகளை அழியாமல் பாதுகாக்க முடியும் என்றார்.

தொடர்புக்கு

பத்மாவதி, செல்போன் : 91596 25365

சிறுதானியத் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்

தொலைபேசி 0422 - 2450507

**ஆதாரம்: பசுமை விகடன் வெளியீடு 10.07.13** www.vikatan.com